தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, மே 15, வியாழக்கிழமை.

வைகாசி 1, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து''.

எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ணவேண்டும். அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக் கூடாது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 789, 790 மற்றும் 791 ஆகியவை மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க முதலில் எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன.

குறைந்த எடை பட்டுச் சேலைகள்.

789—(*வினா எண் 6409): — திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டினரைக் கவரும் வகையில் எடை குறைந்த பட்டுச் சேலைகளைத் தயாரிக்க அரசு திட்டம் தீட்டியுள்ளதா ?

(ஆ) அது பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. வி. ஸி. சுவாமிநாதன் : (அ) தற்பொழுது வெளிநாட்டினரைக் கவரும் வகையில் குறைந்த விலையில் பட்டுச் சேலைகளைத் தயாரிக்கும் முயற்சிகளில் பட்டு கூட்டுறவு சங்கங்கள் ஈடுபட்டுள்ளன.

(ஆ) விலை குறைக்கும் வகையில் குறைந்த எடை உள்ள பட்டு புடவைகளும், ஜரிகை எந்தளவுக்கு குறைக்க முடியுமோ அந்த ளவுக்கு குறைக்கவும் திட்டமிடப்பட்டு சேலைகள் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் எகிப்திய அழகி கிளியோபாட்ராவிற்கு, நம் நாட்டி லுள்ள பட்டுச் சேலைகளை, ஒரு தீப்பெட்டியிலே வைத்து அடைத்து அதை அந்த அம்மையார் அணி வதற்காக அனுப்பியதாகக் கேள்வி. இப்போது ஏன் அது தரம் குறைந்துவிட்டது? இப்போது அந்தமாதிரி பட்டுத் துணி தயாரிப் பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப் புடவைகள், பட்டு வேஷ்டிகள் தரமாகத்தான் நெய்யப்படுகின்றன. வெங்கடாசலபதிக்குக் கூட, சேலத்திலிருந்துதான் நெய்யப்பட்டு, அனுப்பப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சினிமாக்களில் அதாவது நியூஸ் வருகிறது. இந்த 'கோல்கேட் பேஸ்ட்டை இந்த நடிகை உபயோகப்படுத்தியதனால் தான் பல் நன்றாக இருக்கிறது. சோப்-இந்த சோப்பை இந்த நடிகை உபயோகப்படுத்துகிறார், அதை உபயோகப்படுத்தினால் அது உடலுக்கு நல்லது என்று விளம்பரப்படுத்துகிறார்கள். அதே மாதிரி, கோ-ஆப்டெக்ஸில் தயாரிக்கப்படுகின்ற சேலைகள், பட்டுத் துணிகளை எல்லாம் ஒரு விளம்பரப் படமாக எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் கூட, 'சிந்துபைரவி, என்ற புடவையை அறிமுகப்படுத்தினோம். ஏற்கனவே கூட, இது மாதிரி சினிமா நட்சத்திரங்கள் உபயோகப்படுத்துகிற புட வைகள் என்று கூட விளம்பரம் செய்து இருக்கிறோம். இதற்காக தனியாக ஒரு திரைப்படமே தயாரிக்கப்பட்டிருக்கிறது. 'சூஸ்மென்' என்பது அந்தத் திரைப்படத்தின் பெயர்.

சென்னிமலை நெசவாளர்களுக்கு வீடுகள்.

790—*(வினா எண் 8069) திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—